ओं
श्रीगुरुभ्यो नमः

जीवयात्रा - ஜீவயாத்ரா

(ज्ञानानन्द भारतीकृता - ஞாநாநந்த பாரதீக்ருதா)

नित्यानन्दसुखं पदं सुविमलं प्राप्तुं समीहायुताः
सर्वे जन्मभृतः सदा व्यसनिनस्तत्स्थानसंमार्गणे ।
एवं सत्यपि साध्यसाधनयुगं सम्यङ् न जानन्ति ते
न प्राप्ता अधुनापि सौख्यपदवीं स्वाभीष्टरूपां यतः ।।१।।

நித்யாநந்தஸுகம் பதம் ஸுவிமலம்
ப்ராப்தும் ஸமீஹாயுதா:
ஸர்வே ஜன்மப்ருத: ஸதா
வ்யஸநிநஸ்தத்ஸ்தானஸம்மார்கணே ।
ஏவம் ஸத்யபி ஸாத்யஸாதனயுகம்
ஸம்யங் ந ஜாநந்தி தே
ந ப்ராப்தா அதுனாபி ஸௌக்யபதவீம்
ஸ்வாபீஷ்டரூபாம் யத: ।।1।।

जन्मभृतः सर्वे = பிறவி எடுத்திருக்கின்ற அனைவரும் सुविमलं = அழுக்கில்லாத नित्यानन्दसुखं पदं = என்றுமிருக்கின்ற ப்ரஹ்ம ஸுகமாகிய பதத்தை प्राप्तुं = அடைவதற்கு समीहायुताः = மிகுந்த ஆர்வமுடைய வர்களாய் இருக்கிறார்கள். तत्स्थानसंमार्गणे = அந்த (ப்ரஹ்ம) பதத்தை அடைவிக்கும் நல்வழியில் सदा = எப்பொழுதும் व्यसनिनः = முயற்சியுடையவர்களாய் இருக்கிறார்கள். एवं सति अपि = இவ்வாறு இருப்பினும் கூட ते = அவர்கள் साध्यसाधनयुगम् = ஸாத்யத்தையும் ஸாதனத்தையும் सम्यक् = நன்கு न जानन्ति = அறியாதவர்களாய் இருக்கிறார்கள். यतः = (ஸாத்ய ஸாதனத்தை அறியாத) காரணத்தினால் स्वाभीष्टरूपां = தன்னுடைய விருப்ப வடிவமான सौख्यपदवीं = ஸுகஸ்வ ரூபமான பதவியை अधुना अपि = இன்றுவரைக்கும் न प्राप्ता = அவர்கள் அடையவே இல்லை.

तत्प्राप्त्यै प्रभुसंमितापि कृपया त्र्यन्तसारान्विता
वल्ली काठकमध्यगा कविसमं प्रोत्साहयन्ती नरान् ।
एवं साधनकल्पनां रचयते सन्मार्गगानां सतां
तद्विष्णोः परमं पदं च सहसा गन्तुं मनीषावताम् ।।२।।

தத்ப்ராப்த்யை ப்ரபுஸம்மிதாபி க்ருபயா
த்ரய்யந்தஸாரான்விதா
வல்லி காடகமத்யகா கவிஸமம்
ப்ரோத்ஸாஹயந்தீ நரான் ।
ஏவம் ஸாதனகல்பனாம் ரசயதே
ஸன்மார்ககானாம் ஸதாம்
தத்விஷ்ணோ: பரமம் பதம் ச ஸஹஸா
கந்தும் மனீஷாவதாம் ।। 2 ।।

त्र्यन्तसारान्विता = மூன்று வேதங்களின் முடிவில் உள்ள விஷய ஸாரத்துடன் கூடியதும் नरान् = மனிதர்களை प्रोत्साहयन्ती = நன்கு உத்ஸாஹப்படுத்துகின்றதும் काठकमध्यगा = கடோப நிஷத்தின் நடுவில் உள்ளதுமான वल्ली = வல்லியானது प्रभुसंमिता अपि = தலைவனுக்கு நிகராக இருந்த போதிலும் கூட कृपया = அன்பினால் कविसमं = நண்பனுக்கு நிகராக இருந்து கொண்டு सन्मार्गगानां सतां = நல்வழியில் சென்று கொண்டிருப்பவர்களுக்கு, तद्विष्णोः परमं पदं च = அந்த விஷ்ணுவினுடைய (எங்கும் வ்யாபித்திருக்கின்ற) மேலான பதத்தை सहसा गन्तुं = உடனே அடைவதற்கு मनीषावताम् = ஆர்வமுடையவர்களுக்கு तत्प्राप्त्यै = அந்த' ப்ரஹ்ம பதத்தை அடைவதன் பொருட்டு एवं = இவ்விதம் साधनकल्पनां = ஸாதன கல்பனையை रचयते = படைக்கிறது.

आत्मानं रथिनं ब्रवीति निगमो बुद्धिं च तत्सारथिं
देहं स्यन्दनमिन्द्रियाणि तुरगान् शब्दादि तद्गोचरम् ।
चेतः प्रग्रहमादरेण य इमान् वश्यांस्तनोत्यात्मवान्
तस्यैवाप्यमिदं पदं सुखघनं पारं परं ह्यध्वनः ।।३।।

ஆத்மானம் ரதினம் ப்ரவீதி நிகமோ
புத்திம் ச தத்ஸாரதிம்
தேஹம் ஸ்யந்தனமிந்த்ரியாணி
துரகான் சப்தாதி தத்கோசரம் ।
சேத: ப்ரக்ரஹமாதரணே ய இமான்
வச்யாம்ஸ்தனோத்யாத்மவான்
தஸ்யைவாப்யமிதம் பதம் ஸுககனம்
பாரம் பரம் ஹ்யத்வன: ।। 3 ।।

निगमो = வேதமானது आत्मानं = ஜீவாத்மாவை रथिनं = தேரில் அமர்ந்திருப்பவனாகவும் बुद्धिं च = புத்தியை तत्सारथिं = தேரோட்டியாகவும் देहं = உடலை स्यन्दनम् = தேராகவும் इन्द्रयाणि = இந்த்ரியங்களை तुरगान् = குதிரை களாகவும் शब्दादि = சப்தம் முதலிய (விஷயங்களை) तद्गोचरम् = (குதிரைகளினுடைய) பாதையாகவும் चेतः = மனதை प्रग्रहम् = கடிவாளமாகவும் ब्रवीति = கூறுகிறது. यः आत्मवान् = எந்த ஸாதகன் கவனமாக (இருந்து கொண்டு) आदरेण = முயற்சியுடன் इमान् वश्यान् तनोति = இவைகளை தன் வசப்படுத்துகிறானோ तस्य एव = அவனுக்குத் தான் सुखघनं = ஸுகஸ்வரூபமான अध्वनः हि परं पारं = (மோக்ஷ) பாதையினுடைய மேலான முடிவாகிய इदं पदं = இந்த (ப்ரஹ்ம) பதமானது आप्यम् = அடையத்தக்கதாக இருக்கிறது.

प्राप्यं तत्परमं सुखं हि मुनयो मोक्षं समाचक्षते
जीवेशानजगद्विशेषरहितं ज्ञानैकसाध्यं ध्रुवम् ।
येनात्मन्यतिरोहितः स्वमहिमानन्दात्मको भासते
मिथ्याध्यासमतिश्च येन गलति ज्ञानं तदेवामलम् ।।४।।

ப்ராப்யம் தத்பரமம் ஸுகம் ஹி முனயோ
மோக்ஷம் ஸமாசக்ஷதே
ஜீவேசானஜகத்விசேஷரஹிதம்
ஞானைகஸாத்யம் த்ருவம் ।
யேனாத்மன்யதிரோஹித:
ஸ்வமஹிமாநந்தாத்மகோ பாஸதே
மித்யாத்யாஸமதிச்ச யேன
கலதி ஞானம் ததேவாமலம் ।। 4 ।।

जीवेशानजगद्विशेषरहितं = ஜீவன், ஈச்வரன், உலகம் என்ற வேறுபாடுகளற்றதும் ज्ञानैकसाध्यं = ஞானம் ஒன்றினால் மட்டுமே அடையக்கூடியதும் ध्रुवम् = என்றும் நிலைத்திருக்கின்றதும் प्राप्यं = அடையத்தக்கதுமான तत्परमं सुखं हि = அந்த மேலான ஸுகத்தையன்றோ मुनयः = முனிவர்கள் मोक्षं समाचक्षते = மோக்ஷம் என்று நன்கு கூறுகிறார்கள். येन = எந்த ஞானத்தினால் आत्मनि अतिरोहितः = தன்னிடத்தில் உள்ள மறைப்பு நீங்கியவனாகி றானோ स्वमहिमा = தன்னுடைய மேலான आनन्द आत्मकः = ஆநந்த ஸ்வரூபமானது भासते = தெளிவாகிறதோ (விளங்கு கிறதோ) च = மேலும் मिथ्या-अध्यासमतिः = பொய்யாக ஏற்றுவிக்கப் பட்ட அறிவானது येन = எந்த ஞானத்தினால் गलति = நாசமாகிறதோ तद् एव = அதுவே अमलम् ज्ञानं = (மோக்ஷத்தை அடைவிக்கக்கூடிய) தூய்மையான ஞானம்.

आस्तिक्यं दृढमूलमेव मनुजः सम्पादयत्वादितः
कर्माचारयुतस्ततश्च भवतु स्वर्गादिभोगेच्छया ।
स्वर्गादावपि च क्रमेण गमितो नैराश्यमेवास्थिरे
नित्यानित्यविचारणे स्वधिकृतस्तत्त्वं समन्विच्छतु ॥५॥

ஆஸ்திக்யம் த்ருடமூலமேவ மனுஜ: ஸம்பாதயத்வாதித:
கர்மாசாரயுதஸ்ததச்ச பவது ஸ்வர்காதிபோகேச்சயா ।
ஸ்வர்காதாவபி ச க்ரமேண கமிதோ நைராச்யமேவாஸ்திரே
நித்யாநித்யவிசாரணே ஸ்வதிக்ருதஸ்தத்வம்
ஸமன்விச்சது ॥ 5 ॥

आदितः = முதலில் मनुजः = மனிதன் दृढमूलम् = (வேதத்தில்) உறுதியான आस्तिक्यम् एव = நம்பிக்கையையே सम्पादयतु = ஸம்பாதிக்கட்டும். ततः च =பிறகு स्वर्गादि भोगेच्छया = ஸ்வர்கம் முதலிய போகங்களில் இச்சையுடன் कर्माचारयुतः = (வேத) கர்மங்களைக் கடைப்பிடிப்பவனாக भवतु = இருக்கட்டும். च = மேலும் अस्थिरे स्वर्गादौ अपि = நிலையில்லாத ஸ்வர்கம் முதலியவற்றிலும் கூட क्रमेण = படிப்படியாக (கர்ம ஆசாரத்தினால்) नैराश्यम् एव = விருப்பமற்ற தன்மையையே गमितः = அடைந்துவிடுகிறான். नित्यानित्यविचारणे = (பிறகு) நித்ய அநித்ய விசாரத்தில் स्वधिकृतः = நன்கு அதிகாரத்தை அடைந்தவன் तत्त्वं = தத்வத்தை (ப்ரஹ்மனை) समन्विच्छतु = (அறிய) நன்கு விருப்பம் கொள்ளட்டும்.

Vedanta Spiritual Library | www.celextel.org

ज्ञानाप्तेः परिपन्थिनौ किल मलो विक्षेपदोषस्तथा
चेतोनिष्ठमहारिपू प्रथमतश्चोन्मूलनीयौ यतः ।
कामं दूरमपास्य कर्मनिरतो मालिन्यरिक्तस्ततः
चित्तैकाग्र्यसुसिद्धये च भजतां निष्कामनोपासनम् ।।६।।

ஞானாப்தே: பரிபந்திநௌ கில மலோ விக்ஷேபதோஷஸ்ததா
சேதோநிஷ்டமஹாரிபூ ப்ரதமதச்சோன்மூலநீயௌ யத: ।
காமம் தூரமபாஸ்ய கர்மநிரதோ மாலின்யரிக்தஸ்தத:
சித்தைகாக்ர்யஸுஸித்தயே ச பஜதாம்
நிஷ்காமனோபாஸனம் ।। 6 ।।

ज्ञानाप्तेः = ஞானத்தை அடைவதற்கு मलः तथा विक्षेपदोषः = மலம் (விருப்பு, வெறுப்பு) விக்ஷேபம் (மன ஒருமுகப்பாடின்மை) என்ற परिपन्थिनौ = இரண்டு எதிரிகள் (இருப்பது) किल = ப்ரஸித்தம் அல்லவா! यतः = யாது காரணத்தால் चेतोनिष्ठमहारिपू = மனதில் உள்ள (அவைகள் இரண்டும்) எதிரிகளாக இருக்கின்றனவோ प्रथमतः च = (அதனால்) முதலில் उन्मूलनीयौ = அவைகள் இரண்டும் வேருடன் களையத்தக்கனவாக உள்ளன. कामं = (கர்ம பலனில் உள்ள) ஆசையை दूरम् अपास्य = விலக்கி விட்டு कर्मनिरतः = கர்மத்தில் ஈடுபடுபவன் मालिन्यरिक्तः = மலத்திலிருந்து விடுதலையடைகிறான். ततः = பிறகு (அவன்) चित्तैकाग्र्यसुसिद्धये च = மன ஒருமுகப்பாட்டை நன்கு அடைவதற்காக निष्कामनोपासनम् = (அழியக்கூடிய பலனில்) விருப்பமில்லாத உபாஸனையை भजतां = செய்யட்டும் (கடைப் பிடிப்பானாக).

कर्मोपासनतो विशुद्धहृदयस्तत्त्वार्थसंसिद्धये
स्वाचार्यं परिचर्य शास्त्रविधिना तस्माच्च विद्यां पराम् ।
श्रुत्वा संशयनुत्तये च मननं स्थाम्ने निदिध्यासनम्
अभ्यस्य क्रमशः समाधिनिलयः प्राप्नोतु शान्तिं ध्रुवाम् ।।७।।

கர்மோபாஸனதோ விசுத்தஹ்ருதயஸ்
தத்வார்தஸம்ஸித்தயே
ஸ்வாசார்யம் பரிசர்ய சாஸ்த்ரவிதினா
தஸ்மாச்ச வித்யாம் பராம் ।
ச்ருத்வா ஸம்சயனுத்தயே ச மனனம்
ஸ்தாம்னே நிதித்யாஸநம்
அப்யஸ்ய க்ரமச: ஸமாதிநிலய:
ப்ராப்னோது சாந்திம் த்ருவாம் ।। 7 ।।

कर्मोपासनतः = கர்மத்தினாலும் உபாஸனையினாலும் विशुद्धहृदयः = தூய்மையான மனதை அடைந்தவன் तत्त्वार्थसंसिद्धये =ஆத்மஞானத்தை நன்கு அடைவதற்காக शास्त्रविधिना = சாஸ்த்ர விதிப்படி स्वाचार्यं = நல்ல குருவை (அடைந்து) परिचर्य = (அவருக்கு) பணிவிடை செய்து तस्मात् च = அவரிடமிருந்து परां विद्यां = மேலான (ஆத்ம) ஞானத்தை श्रुत्वा = கேட்டு संशयनुत्तये च = ஸந்தேகங்கள் நீங்குவதற்காக मननं = (யுக்தி பூர்வமாக) சிந்தித்து स्थाम्ने = ஞானத்தில் நிலை பெறுவதற்காக क्रमशः = படிப்படியாக निदिध्यासनम् = நிதித்யாஸனத்தை अभ्यस्य = பயிற்சி செய்து (கடைப்பிடித்து) समाधिनिलयः = ஞானத்தில் உறுதி பெற்றவன் ध्रुवाम् शान्तिं = நிலையான அமைதியை प्राप्नोतु = அடையட்டும்.

ब्रह्मज्ञोऽपि स वासनाक्षयमनोनाशौ विधाय क्रमात्
स्वात्मारामपरोऽनिशं सुखघनो मुक्तः स जीवन्नपि ।
प्रारब्धे क्षपिते च देहविलये मुक्तिं विदेहाङ्गतः
सच्चित्सौख्यमये ह्युपाधिरहिते मज्जत्वपारे परे ।।८।।

ப்ரஹ்மஜ்ஞோऽபி ஸ வாஸநாக்ஷயமனோநாசௌ
விதாய க்ரமாத்
ஸ்வாத்மாராமபரோநிசம் ஸுககனோ முக்த: ஸ ஜீவன்னபி ।
ப்ராரப்தே க்ஷபிதே ச தேஹவிலயே
முக்திம் விதேஹாங்கத:
ஸச்சித்ஸௌக்யமயே ஹ்யுபாதிரஹிதே
மஜ்ஜத்வபாரே பரே ।। 8 ।।

सः ब्रह्मज्ञः अपि = ஒருவன் ப்ரஹ்ம ஞானத்தை அறிந்திருந்தாலும் கூட वासनाक्षयमनोनाशौ = வாஸனா க்ஷயத்தையும் மனோ நாசத்தையும் क्रमात् विधाय = படிப்படியாகச் செய்து सः = அவ்வாறு செய்தவன் जीवन् अपि = வாழ்ந்துகொண்டிருந்தபோதிலும் கூட अनिशं = எப்பொழுதும் स्वात्मारामपरः= தன்னிடத்திலேயே தான் மகிழ்ந்திருக்கிறான். सुखघनः = ஸுகஸ்வரூபமாக இருக்கிறான். मुक्तः = ஜீவன் முக்தனாக இருக்கிறான். प्रारब्धे क्षपिते च = ப்ராரப்த கர்மம் நாசமடையும் பொழுது देहविलये = (அதாவது) இந்த ஸ்தூல தேஹம் மரணம் அடையும் பொழுது विदेहां मुक्तिं गतः = விதேஹ முக்தியை அடைகிறான் (மீண்டும் சரீரத்தை எடுப்பதில்லை). उपाधिरहिते = உபாதிகளற்ற अपारे = வரையறைக்குட்படாத (எல்லையில்லாத) परे = மேலான सच्चित्सौख्यमये हि = ஸச்சிதாநந்த ஸ்வரூபத்திலேயே मज्जतु = அவன் மூழ்கியிருக்கட்டும் (ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருக்கட்டும்).

इत्थं वेदवचोभिरेव नियते मार्गे वयं यात्रिकाः
धर्माख्ये च सनातने कृतपदा वर्णाश्रमाचारिणः ।
गच्छामः क्रमशश्च मोक्षपदवीमानन्दरूपां यथा
श्रद्धाभक्तिमतस्तथा धृतियुतानस्मान् विदध्याद् गुरुः ।।९।।

இத்தம் வேதவசோபிரேவ நியதே மார்கே வயம் யாத்ரிகா:
தர்மாக்யே ச ஸநாதநே க்ருதபதா வர்ணாச்ரமாசாரிண: ।
கச்சாம: க்ரமசச்ச மோக்ஷபதவீம் ஆநந்தரூபாம் யதா
ச்ரத்தாபக்திமதஸ்ததா த்ருதியுதானஸ்மான் விதத்யாத் குரு: ।। 9 ।।

इत्थं = இவ்விதம் (இதுவரை கூறியபடி) वेदवचोभिः एव = வேத வசனங்களாலேயே नियते = நியமிக்கப்பட்டதும் धर्माख्ये = தர்மம்என்ற பெயருடையதும் सनातने च = என்றும் இருப்பதுமாகிய मार्गे = (மோக்ஷ) மார்க்கத்தில் वर्णाश्रमाचारिणः = வர்ண ஆச்ரம தர்மங்களைக் கடைப்பிடித்தல் என்ற यात्रिकाः वयं = யாத்ரையை செய்பவர்களாகிய நாங்கள் कृतपदाः = காலடி எடுத்து வைத்துவிட்டோம். (எங்களுடைய பயணத்தை ஆரம்பித்து விட்டோம்). क्रमशः च गच्छामः = படிப்படியாக நாங்கள் செல்கின்றோம். आनन्दरूपां = ஆநந்த ரூபமான मोक्षपदवीम् = மோக்ஷ பதவியை (அடையும் முயற்சியில்) यथा श्रद्धाभक्तिमतः = எவ்விதம் ச்ரத்தையும் பக்தியும் (உடையவர்களாக நாங்கள் இருக்கின்றோமோ) तथा = அவ்விதமே (மோக்ஷ மார்க்கத்தில் இறுதிவரை செல்வதற்கு) धृतियुतान् = உறுதியுடன் (சக்தியுடன்) கூடியவர்களாக अस्मान् = எங்களை गुरुः = குருவானவர் विदध्याद् = ஆசி வழங்கி அருள் புரிவாராக.